இடைத்தேர்தல் தடையை நீக்கக் கோரி முதல்வர் விஜய் மனு

சென்னை, ஆக. 28: பொது நலன் கருதி திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்கி, இடைத்தேர்தல் நடத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி, முதல்வர் ஜோசப் விஜய் சென்னை உயர்நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்தார்.

தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி பாளையங்கோட்டையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி அமர்வு, 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதித்து உத்தரவிட்டது. தேர்தல் வழக்குகள் முடியும் வரை, இந்தத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்படாது என தேர்தல் ஆணையம் பதில் மனு தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கில், முதல்வர் விஜய் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை நான் கடந்த மே மாதம் 10-ஆம் தேதி ராஜிநாமா செய்துவிட்டேன். ஆனால், இந்தத் தொகுதியில் நான் வெற்றி பெற்றதை எதிர்த்து ஜூலை 17-ஆம் தேதிதான் தேர்தல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனது ராஜிநாமாவை பேரவைத் தலைவர் ஏற்றுக் கொண்ட நாளில், எந்தத் தேர்தல் வழக்கும் நிலுவையில் இல்லை.

எனவே, காலியானதாக அறிவிக்கப்பட்ட தொகுதிக்கு தேர்தல் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. இடைத்தேர்தல் அறிவிக்க தடை கோரி வழக்குத் தொடர்ந்தவர், தேர்தல் வழக்கு தாக்கல் செய்தவரோ, அந்தத் தொகுதியின் வாக்காளரோ அல்ல. திருச்சி கிழக்குத் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தக் கூடாது என்ற உள்நோக்கத்தில், அடிப்படை உரிமையில்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், தொகுதியைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர், மக்கள் பிரதிநிதி இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். பொது நலனுக்கு எதிரான இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. 5 தொகுதிகளின் எம்எல்ஏ-க்களுக்கு எதிராக தேர்தல் வழக்கு தாக்கல் செய்தவர்களுக்காக, இந்தப் பொதுநல வழக்கு தாக்கல் செய்ய முடியாது. திருச்சி கிழக்கு தொகுதியில் 20 பேர் போட்டியிட்ட நிலையில், தேர்தல் வழக்கை தாக்கல் செய்தவரை வெற்றி பெற்றவராக அறிவிக்க முடியாது.

காலியாக உள்ள திருச்சி கிழக்கு தொகுதிக்கு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி தேர்தல் ஆணையம், இடைத்தேர்தல் அறிவிக்க வேண்டும். இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கப்பட்ட 5 தொகுதிகளிலும் பலமுனைப் போட்டி நடந்துள்ளது. இரு வேட்பாளர்கள் மட்டும் போட்டியிடவில்லை.

எனவே, பொது நலன் கருதி இடைத்தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும். இந்த வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என அந்த பதில் மனுவில் கூறியுள்ளார்.

இடைத்தேர்தல் அறிவிப்புக்கு தடை விதிக்கக் கோரிய வழக்கு தலைமை நீதிபதி அமர்வில் செப். 8-ஆம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது.

அமைச்சர் மரிய வில்சன் இங்கிலாந்து அரசர் அல்ல!

உயர்நீதிமன்றம் கண்டனம்

சென்னை, ஆக. 28: 'நிதியமைச்சர் மரிய வில்சன் இங்கிலாந்து அரசர் அல்ல; அமைச்சர் ஆவதற்கு முன்பு நீதிமன்றத்தில் ஆஜரான மரிய வில்சன், அமைச்சர் பதவிக்கு வந்தபிறகு ஆஜராகமாட்டாரா?' என சகோதரரை தாக்கிய வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன், கடந்த 2022 ஆக.8-ஆம் தேதி புதுச்சேரி எழில் நகரில் வசித்து வரும் அவரது சகோதரர் மரிய குலோத் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று அவரையும், அவரது மனைவி கெரோலினையும் தாக்கியதாக லாஸ்பேட்டை போலீஸார் வழக்குப்பதிவு செய்திருந்தனர்.

புதுச்சேரி குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி அமைச்சர் மரிய வில்சன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மரிய வில்சன் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஹாஜா மொகிதீன் கிஸ்தி, சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால், புதுச்சேரி நீதிமன்ற விசாரணைக்கு நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதை ஏற்க மறுத்த நீதிபதி, நிதியமைச்சர் மரிய வில்சன் இங்கிலாந்து அரசர் அல்ல. நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோதே நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கிறார். அமைச்சர் ஆவதற்கு முன்பு நீதிமன்றத்தில் ஆஜரான மனுதாரர், அமைச்சர் பதவிக்கு வந்தபிறகு ஆஜராகமாட்டாரா? எனக் கேள்வி எழுப்பி கண்டனம் தெரிவித்தார். அப்போது புதுச்சேரி காவல் துறை தரப்பில், வேளாங்கண்ணி ஆலய கொடி ஏற்றத்தில் பங்கேற்க அமைச்சர் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதி, அமைச்சர் வேளாங்கண்ணி சென்று திரும்பும்போது, புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜராகலாமே என கேள்வி எழுப்பி, எந்தத் தேதியில் அமைச்சர் மரியவில்சன் ஆஜராகிறார் என்ற விவரங்களைக் கேட்டு தெரிவிக்கும்படி கூறினார்.

இதையடுத்து அமைச்சர் மரியவில்சன் தரப்பில், ஆக.31-ஆம் தேதிக்குப் பிறகு புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜராவார் என்றும், இந்த மனுவைத் திரும்பப் பெற அனுமதிக்கவும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் குற்றப்பத்திரிகையை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்ய அனுமதி வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, வழக்கை ரத்து செய்யக் கோரிய நிதியமைச்சர் மரிய வில்சனின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

பின்னர், உயர்நீதிமன்றத்தின் வெளியே செய்தியாளர்களைச் சந்தித்த மரிய வில்சன் தரப்பு வழக்குரைஞர் ஹாஜாமொகிதீன் கிஸ்தி, நிதியமைச்சர் மரிய வில்சனுக்கும் அவரது சகோதரர் மரிய குலோத்துக்கும் இடையே சொத்து பிரச்னை கிடையாது. குழந்தையை தத்தெடுப்பது தொடர்பான குடும்பப் பிரச்னை. அமைச்சரின் சகோதரர் தரப்பினர் அரசியல் உள்நோக்கத்துடன் இந்த விவகாரத்தை பெரிதாக்கி வருகின்றனர். அமைச்சரிடம் இருந்து அவரது சகோதரர் மரிய குலோத் கூடுதல் பணம் பறிக்கும் நோக்கில் செயல்பட்டனர். இதனால்தான் சமரச தீர்வு மையத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்படவில்லை என விளக்கம் அளித்தார்.

5.32 லட்சம் நவீன மிதிவண்டிகள்: ஒப்பந்தப்புள்ளி கோரியது தமிழக அரசு

சென்னை, ஆக. 28: பிளஸ் 1 வகுப்பு மாணவர்களுக்கு 5.32 லட்சம் நவீன மிதிவண்டிகளை வழங்கும் திட்டத்துக்கான ஒப்பந்தப்புள்ளியை தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ள மிதிவண்டிகள் தலைக்கவசம் மற்றும் தண்ணீர் பாட்டிலுடன் கொள்முதல் செய்யப்பட உள்ளன. பிளஸ் 1 வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 2,37,133 மிதிவண்டிகளும், மாணவியருக்கு 2,95,255 மிதிவண்டிகளும் என மொத்தம் 5,32,388 மிதிவண்டிகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. இந்த மிதிவண்டிகள், தலைக்கவசம் மற்றும் தண்ணீர் பாட்டிலுடன் இணைத்து வழங்கப்படும்.

கொள்முதல் ஆணை பெற்ற நாளில் இருந்து 150 நாள்களுக்குள் மிதிவண்டிகளை வழங்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க விரும்பும் நிறுவனங்கள் ரூ.70 லட்சம் முன்பிணைப்பு தொகையைச் செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திமுக 110 மாவட்டங்களாகப் பிரிப்பு

சென்னை, ஆக. 28: திமுகவில் அமைப்பு ரீதியான மாவட்டங்களின் எண்ணிக்கை 77-இல் இருந்து 110-ஆக உயர்த்தப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

திமுக தொடங்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை 15 முறை உள்கட்சித் தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம். இதையடுத்து, 16-ஆவது உள்கட்சித் தேர்தலை நடத்தவும், பல்வேறு அமைப்புரீதியாக நிர்வாக மாற்றங்கள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சூழலில், கட்சியின் நலன் கருதி, தற்போதுள்ள அமைப்பு ரீதியான மாவட்டங்களின் எண்ணிக்கை 77-இல் இருந்து 110-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சோழிங்கநல்லூர் தொகுதி-தனி மாவட்டம்: அவற்றில், அதிகமான மக்கள்தொகை இருப்பதன் காரணமாக சோழிங்கநல்லூர் தொகுதி மட்டும் தனி மாவட்டமாக அறிவிக்கப்படுகிறது.

இந்த 110 மாவட்டங்களில் தற்போதுள்ள மாவட்டச் செயலர்கள், திமுக தலைமை சார்பில் அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில் மாவட்டச் செயற்குழுவைக் கூட்டி, புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் அடிப்படையில், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டம் மற்றும் கிளை அமைப்புகளைப் பிரிப்பதற்கான பரிந்துரைகளை 15 நாள்களுக்குள் வழங்க வேண்டும்.

மேலும், செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும், மறுசீரமைப்புக்குழு மூலம் வழங்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றியும் திமுக அமைப்புகளை உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் மு.க.ஸ்டாலின்.

திமுகவை மீண்டும் வெற்றிக்கு அழைத்துச் செல்வேன்

'திமுகவை மீண்டும் வெற்றிக்கு அழைத்துச் செல்வேன்' என்று அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

கடந்த 2018-இல் இதே நாளில் திமுக தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது, நமது கொள்கைகள், நமக்குள் இருக்கும் குறைகள், காலத்துக்கேற்ப நாம் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்து ஆலோசித்தோம்.

அந்த வகையில், திமுக தலைவராக 9-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நாளில், கட்சி சார்பில் ஒரு மாற்றத்தை, மறுசீரமைப்பை அறிவித்துள்ளேன்.

திமுகவின் நலனை முன்னிறுத்திச் செய்யப்பட்டிருக்கும் இந்த மறுசீரமைப்புக்குக் கட்சியினர் துணைநிற்க வேண்டும். உங்களின் துணையோடு மீண்டும் திமுகவை வெற்றிக்கு அழைத்துச் செல்வேன்.

எதிரிகளை வீழ்த்துவோம்

சென்னை, ஆக. 28: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் எதிரிகளை வீழ்த்துவோம் என எதிர்க்கட்சி தலைவரும், திமுக இளைஞர் அணிச் செயலருமான உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

திமுக தலைவராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்று 9-ஆவது ஆண்டில் அடியடுத்து வைப்பதையொட்டி, உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவு:

தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கும் பேரியக்கமான திமுகவின் தலைவராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாள் ஆக. 28. பெரியார், முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் வழியில், உறுதியான கொள்கைப் பிடிப்புடன், தொண்டர்களைத் தொய்வின்றி வழிநடத்தி அமைப்பின் பலத்தை வலுப்படுத்தும், திமுக தலைவருக்கு உறுதுணையாக நிற்போம். இந்த இயக்கத்தை அழிக்க நினைக்கும் வஞ்சகர்களை வீழ்த்த திமுக தலைவர் தலைமையில் அணி திரள்வோம் எனத் தெரிவித்தார்.

பங்குகள் ஏலம்மூலம் ரூ.5,000 கோடி திரட்டுகிறது தமிழக அரசு

சென்னை, ஆக. 28: பங்குகள் ஏலத்தின் மூலம் ரூ.5,000 கோடி திரட்ட தமிழக அரசு திட்டமிட்டது.

இதுதொடர்பாக தமிழக நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலர் வெளியிட்ட அறிவிப்பு: 'தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.5,000 கோடி மதிப்புள்ள பங்குகள் வடிவிலான 7.49 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள்-2036 ரூ.1,000 கோடி மறுவெளியீடு, 7.62 சதவீத பிணையப் பத்திரங்கள்-2041 ரூ.2,000 கோடி மறுவெளியீடு மற்றும் 7.70 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள்-2051 ரூ.2,000 கோடி மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய உள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் செப்.1-ஆம் தேதி நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கிச் சேவை முறையில் மின்னணு படிவத்தில் செப்.1-ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

பள்ளி, கல்லூரிகளில் ஜாதிய பாகுபாடு

நீதிபதி சந்துரு குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரி மனு: அரசு பதிலளிக்க உத்தரவு

மதுரை, ஆக. 28: கள்ளர் சீரமைப்பு, ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள், கல்லூரிகளில் ஜாதிய பாகுபாட்டை ஒழிக்க அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு தலைமையிலான குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரிய மனு தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த பர்வேஷ் முஷ்ரஃப் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் கடந்த 2023-ஆம் ஆண்டு பள்ளி மாணவர், அவரது சகோதரி ஜாதிய அடிப்படையிலான தாக்குதலுக்கு உள்ளாகினர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, பள்ளி, கல்லூரிகளில் ஜாதி, மதம் உள்ளிட்ட வேறுபாடுகளற்ற சூழலை உருவாக்குவது தொடர்பாக ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைகளை வழங்க ஓய்வு பெற்ற நீதிபதி கே. சந்துரு தலைமையில் ஒரு நபர் குழுவை தமிழக அரசு அமைத்தது.

இதையடுத்து, ஜாதி அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் கல்வி நிறுவனங்களின் பெயர்களில் இடம்பெறும் ஜாதிப் பெயர்களை நீக்குதல் உள்ளிட்ட 20 உடனடி பரிந்துரைகளும், 3 நீண்ட கால இலக்குகளும் முன்வைக்கப்பட்டன. இந்தப் பரிந்துரைகளில் சில செயல்படுத்தப்பட்டன. பல பரிந்துரைகள் முழுமையாக அமல்படுத்தப்படவில்லை.

எனவே, நீதிபதி சந்துரு குழுவின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

மேலும், 'உரிமை முற்றம்' அமைப்பு உண்மையில் செயல்படுகிறதா? என்பது குறித்து மாவட்ட வாரியாக அறிக்கை தாக்கல் செய்யவும், ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அமல்படுத்தவும் உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனுவை வெள்ளிக்கிழமை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், ஆர். சக்திவேல் அமர்வு பிறப்பித்த உத்தரவு: இந்த மனு தொடர்பாக தமிழக அரசுத் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

நேபாளத்தில் வெள்ளம், நிலச்சரிவு

தமிழகத்தைச் சேர்ந்தவர்களை மீட்கக் கோரிய மனு மீதான விசாரணை செப்.10-க்கு ஒத்திவைப்பு

மதுரை, ஆக. 28: நேபாளத்தில் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கிய தமிழகத்தைச் சேர்ந்தவர்களை மீட்கக் கோரிய மனு மீதான விசாரணையை வருகிற செப். 10-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த பர்வேஷ் முஷ்ரப் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

கும்பகோணத்தைச் சேர்ந்த தனியார் பயண நிறுவனம் மூலம் தமிழகம், புதுச்சேரியைச் சேர்ந்த சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி உள்ளிட்ட 57 பேர் கடந்த 23-ஆம் தேதி கும்பகோணத்திலிருந்து நேபாளத்துக்குச் சுற்றுலா சென்றனர். இந்த நிலையில், அங்கு ஏற்பட்ட திடீர் வெள்ளம், நிலச்சரிவில் இவர்கள் சிக்கினர்.

இதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் விவரம், சிகிச்சை பெறுபவர்கள், காணாமல் போனவர்கள் குறித்த விவரங்களை அவர்களின் குடும்பத்தினருக்கு தெரிவிக்க வேண்டும். மேலும், மீட்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதி சி.வி. கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வு முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, அரசுத் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர், நேபாளத்தில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன என்றார்.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

இந்த விவகாரத்தில் மீட்புப் பணிகளை விரைவுபடுத்தும் வகையில், தமிழக அரசுத் தரப்பில் நான்கு அமைச்சர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக செய்தியில் பார்த்தோம். எனவே, இந்த மனு தொடர்பாக உடனடியாக எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது. மனுதாரரின் கோரிக்கை குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது குறித்து அரசுத் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை வருகிற செப்.10-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

பெண் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் மாதவிடாய் விடுப்பு

அரசு விரைந்து முடிவெடுக்காவிட்டால் நீதிமன்றம் தகுந்த உத்தரவு பிறப்பிக்க நேரிடும்

மதுரை, ஆக. 28: பெண் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுப்பு வழங்கும் விவகாரத்தில் அரசு விரைந்து முடிவெடுக்காவிட்டால் நீதிமன்றம் தகுந்த உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

மதுரை கோமதிபுரத்தைச் சேர்ந்த நர்மதா சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தமிழகத்தில் அரசு, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பல பெண் பணியாளர்கள் மாதவிடாய் காலங்களில் அவதிக்குள்ளாகின்றனர். இதுகுறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டபோது, தமிழகத்தில் பெண்களுக்கு ஊதியத்துடன்கூடிய மாதவிடாய் விடுப்பு வழங்கும் கொள்கை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மாதவிடாய் என்பது இயற்கையான உயிரியல் செயல்முறை. இது பெண்களின் உடல் நலம், மனநலத்தைப் பாதிக்கும். கர்நாடகம், பிகார், ஒடிஸா, கேரளம் போன்ற மாநிலங்களில் மாதவிடாய் விடுமுறை தொடர்பான கொள்கைகள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளன. பெண்கள் எதிர்கொள்ளும் உடல் நல பிரச்னைகள், ஊதிய இழப்பு, பணியிட சிரமங்கள் குறித்து விளக்கி, தமிழக அரசுக்கு விரிவான மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, பணியாற்றும் பெண்களுக்கு மாதவிடாய் கால விடுப்பு வழங்கும் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய மாநில அளவிலான குழுவை அமைக்கவும், பெண்கள் நலனைக் கவனத்தில் கொண்டு முழு ஊதியத்துடன்கூடிய விடுப்பு வழங்குவது குறித்த கொள்கையை வகுக்கவும் தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த உயர்நீதிமன்றம், இந்த விவகாரத்தில் தமிழக அரசு ஆலோசனை நடத்தி பதிலளிக்க உத்தரவிட்டது.

இந்த நிலையில், இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வு முன் வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில், மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஊதியத்துடன் விடுமுறை அளிப்பது தொடர்பாக விதிகளை உருவாக்க அரசு சிறப்புக் குழு அமைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு அரசுத் தரப்பில், தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நிறைவடைந்த பிறகு அரசு உரிய முடிவு எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

இந்த விவகாரத்தை தொடர்ந்து தள்ளி வைக்க முடியாது. சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் நிறைவடைந்த பிறகு அரசு உரிய முடிவெடுக்க வேண்டும். இல்லையெனில், நீதிமன்றமே இதுகுறித்து தகுந்த உத்தரவு பிறப்பிக்கும். இந்த வழக்கு விசாரணை வருகிற செப். 17-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

தெற்கு இரயில்வே

பொருட்கள் மேலாண்மை துறை
ஏல நிகழ்ச்சி நிரல் – செப்டம்பர் – 2026 க்கு
சேர்த்தல் / திருத்தம் அறிவிப்பு எண். 09 / 2026

ஃபெர்ரஸ் ஸ்க்ராப், ஃபெர்ரஸ் அல்லாத ஸ்க்ராப், பிற பல்வகை ஸ்க்ராப்கள், கழித்துக் கட்டப்பட்ட வேகன், பயணப்பெட்டிகள் மற்றும் லோகோக்கள், ஸ்க்ராப் ரெயில்கள் மற்றும் பிற நிரந்தர வழி ஸ்க்ராப் பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்காக மின்னணு ஏலம் நடத்தப்படும்.

(A)

மின்னணு ஏலத்தை நடத்துபவர்	செப்டம்பர் – 2026 ன் ஏல அட்டவணையில் சேர்க்கப்பட்ட கூடுதல் ஏல தேதிகள்	ஏலத்திற்கான பொருட்கள்
GSD/ பெரம்பூர்	10.09.2026	மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் பற்றிய விவரங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன

குறிப்பு : செப்டம்பர் – 2026 ல் அட்டவணையிடப்பட்டுள்ள மற்ற அனைத்து ஏலங்களும் மாற்றப்படாமல் அப்படியே உள்ளன.

(B)

மின்னணு ஏலத்தை நடத்துபவர்	ஏற்கனவே உள்ள ஏல தேதி	ஒத்தி வைக்கப்பட்ட / முன் கூட்டிய தேதி	ஏலத்திற்கான பொருட்கள்
GSD/ பெரம்பூர்	15.09.2026	18.09.2026	மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் பற்றிய விவரங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு : செப்டம்பர் – 2026 – ல் அட்டவணையிடப்பட்டுள்ள மற்ற அனைத்து ஏலங்களும் மாற்றப்படாமல் அப்படியே உள்ளன.

விரிவான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் ஏலப்பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ளவும் பார்வையிடுங்கள் இணையதளம் http://www.ireps.gov.in ->E-Auction->Sale ->Live Auctions

முதன்மை தலைமை பொருட்கள் மேலாளர்

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda India's International Bank 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர்,
3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை – 625 014, போன் : 0452–2602200,
மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. திரு.S.ஹாரீஸ் அப்துல் காதர் (கடன்தாரர்), த/பெ.திரு.S.ஷாஜகான், கதவு எண்.25/68, அன்சாரி நகர், 1வது வீதி, மெஹபூப்பாளையம், மதுரை – 625 010. **2. திரு.S.ஷாஜஹான் (சார்–கடன்தாரர் மற்றும் அடமானதாரர்),** த/பெ.திரு.ஷேக் அப்துல் காதர், கதவு எண்.25/68, அன்சாரி நகர், 1வது வீதி, மெஹபூப்பாளையம், மதுரை – 625 010.	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார் பதிவு மாவட்டம், தேனி தாலூகா, அல்லிநகரம் கிராமம், அல்லிநகரம் நகராட்சி, தேனி டவுன், சஹாப் ராவுத்தர் வீதி, அயன் சர்வே எண்.482/B6B, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடச் சொத்தின், மொத்தமுள்ள 26 சென்டில் வட மேற்குப் பகுதியிலுள்ள மொத்தம் 1047.25 சதுரடியில் தென்புற மற்றும் மேற்புற பகுதி 662.25 சதுரடி காலி வீட்டு மனை, மற்றும் வீடு– பழைய வார்டு எண்.19, உள்ள வார்டு எண்.29, கதவு எண்.11 கொண்ட வீட்டின் வரி விதிப்பு எண்.19309. **எல்லைகள் விபரம்:** மேற்கு – திரு.ஹபிப்ல்லா மற்றும் திரு.S.ஷாஜஹானின் வீடு மற்றும் பொதுச் சந்து, தெற்கு – தென்வடல் 3 அடி அகல கிழமேல் பொதுச் சந்து, கிழக்கு – ஹாஜி S.முகமது கனி மற்றும் S. ஹக்கீம் ஆகியோரின் வீடுகள் மற்றும் தென்வடல் பொதுச் சுவர், வடக்கு – தென்வடல் 8.5 அடி அகல மற்றும் கிழமேல் 191 அடி நீளம். இவ்வெல்லைகளுக்கிடையில், **அளவுகளாக,** கிழமேல் 6¾ அடி, தென்வடல் 18 அடி, மொத்தம் 121.5 சதுரடி, மண்சுவர் மற்றும் செங்கலால் கட்டப்பட்டு ஜிங்க் கூரையிட்ட முதல் பிளாக்கிலுள்ள வீடு மற்றும் கிழமேல் 9.25 அடி, தென்வடல் 9 அடி என மொத்தம் 83.25 சதுரடி தார்க் கூரைக் கட்டிடம், மண்ணும், செங்கற்களும் கொண்டு கட்டப்பட்ட சுவருடன் இரண்டாம் பிளாக்கிலுள்ளது மேலும் கிழமேல் வடபுறம் 9.25 அடி, தென்புறம் 8¾ அடி, தென்வடல் 17.5 அடி என மொத்தம் 157.5 சதுரடி தார்க் கூரையிட்ட கட்டிடம், மண்ணும் செங்கற்களிலும் கட்டப்பட்ட சுவருடன் மூன்றாம் பிளாக்கிலுள்ளது, மற்றும் கிழமேல் 16 அடி, தென்வடல் 18¼ அடி, மொத்தம் 300 சதுரடி கொண்ட நான்காம் பிளாக்கிலுள்ள தார்க் கூரைக் கட்டிடம். மேற்குறிப்பிட்ட 1 முதல் 4 பிளாக்குகளிலுமுள்ள மொத்தம் 662.25 சதுரடி ஜிங்க் தார்க் கூரை வடபுறம் பார்த்த கட்டிடம், கதவுகள், சன்னல்கள், முன்வாசல் சிறப்புக் கட்டுமானங்களுடன். மேற்படி வீட்டின் நிறுவப்பட்டுள்ள மின்சார இணைப்பின் சர்வீஸ் இணைப்பு எண்.501–002–240 மேலும் W.C.எண்.8908 ல் குடிநீர் வசதியும் செய்யப்பட்டது. இச்சொத்து லேட்.S.ஷேக் அப்துல் காதர் மகன் திரு.S.ஷாஜஹான் பெயரில் உள்ளது. **வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL** **GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக் குறிப்பிற்காக) : அட்சரேகை : 10.009118, தீர்க்கரேகை : 77.475739** **Property ID in BAANKNET Portal : BARB602820250005**	28.08.2026 தேதியன்று, ரூ.75,69,053/– (ரூபாய் எழுபத்து ஐந்து லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து ஐம்பத்து மூன்று மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	17.09.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.18,40,000/– (ரூபாய் பதினெட்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) 2. ரூ.1,84,000/–(ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) 3. ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)	கொள்நிலை (Physical) சுவாதீனம்	15.09.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 0452–2602200, மொபைல் எண்.9790247824; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 28.08.2026 / இடம் : மதுரை

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) / பேங்க் ஆஃப் பரோடா